1991 சனவரி 25]

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட அனுமதி இல்லாத குடியிருப்புகளில் வீடு கட்டுபவர்களை உள்ளாட்சி மன்றங்கள் எதுவும் ஆரம்பத்தில் தடுப்பதில்லை. ஆனால் கட்டி முடித்துவிட்ட பின்னால் வரியும் வசூலித்துவிட்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்படாமல் இருப்பதால், அரசால் விரைந்து அந்த திட்டம் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட நிலை அதிகமாக நீடிக்கவில்லை. ஏற்கெனவே 10, 15 ஆண்டுகளாக இப்படி அனுமதி இல்லாமல் கட்டிய கட்டிடங்கள் ஏராளமாக இருக்கின்ற காரணத்திற்காகவும், பொது மக்களுடைய வசதியை ஒட்டி பல உறுப்பினர்கள் இதே அவையில் சொல்லிய கருத்தையும் பரிசீலித்து இப்படிப்பட்ட நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம் அதைப்பற்றி பிறகு ஆலோசித்து கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த நிலை குறைந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்கள் வரையிலாவது, அந்தக் காலவரையறை வரையிலாவது விரைந்து செயல்படுத்த அரசு ஆணையிடுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆரம்பப் பதிலிலேயே தெரிவித்திருக்கிறேன். இதுவரையில் அவ்வாறு பாதிக்கப்பட்டிருந்தாலும், இனிமேல் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதையொட்டி அது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் தருவாயில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9.25 மணி

கொளத்தூரில் மார்க்கெட்டிங் சொசைட்டி

*8289—திரு. மா. சீரங்கன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனில் கொளத்தூர் பகுதியில் மிளகாய் அதிகமாக சாகுபடி செய்து வருகின்ற விவசாயிகள் மார்க்கெட்டிங் சொசைட்டி இல்லாமல் அவதிப்படுவதை அரசு அறியுமா?

[1991 சனவரி 25

(ஆ) ஆம் எனில், அங்கு ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனில் கொளத்தூர் பகுதியில் மிளகாய் அதிகமாக சாகுபடி செய்து வருகின்ற விவசாயிகளுக்கு உதவுவதற்காக, சேலம் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகின்றது. எனவே மார்க்கெட்டிங் சொசைட்டி இல்லாமல் அவதிப்படும் வினா எழவில்லை.

(ஆ) ஏற்கனவே ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டி செயல் படுவதால், புதிதாக ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டி ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

திரு. மா. சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் ஜில்லா, கொளத்தூர் பஞ்சாயத்துப் பகுதியில் பெரும் பகுதி விவசாயிகள் விவசாயத்தை நம்பி வாழ வேண்டியவர்களாதலால் அதிகமாக அவர்கள் மிளகாய் பயிரிடுகிறார்கள். அவ்வாறு மிளகாய் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் அவற்றை மார்க்கெட்டுக்கு விற்பதற்காகக் கொண்டுவரும்போது அவர்களை ஏமாற்றும்படியான நிலைமை இருக்கிறது. அதனால் அவர்கள் நஷ்டம் அடையும் நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் புதிதாக ஒரு மார்க்கெட்டிங் சொசைட்டி ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றார்கள். ஆனால் அங்கே சில தனியார்கள் வாரத்திற்கு இரண்டு முறை மார்க்கெட் மூலம் மிளகாயை வாங்குகிறார்கள். அவ்வாறு அவர்கள் வாங்கும் போது நாள் ஒன்றுக்கு 20 லோடுகளுக்கு மேல் மிளகாய் எடுத்துச் செல்கிறார்கள். மூட்டை ஒன்றுக்கு 1 ரூபாய் வீதம் அவர்கள் அதற்குப் பெறுகிறார்கள். அந்த இடம் ஏற்கனவே காவல் துறைக்கு என்று ஒதுக்கப்பட்ட இடம். அதைத் தனியார் ஆக்கிரமித்துக் கொண்டு, விவசாயிகளிடத்திலிருந்து அப்படிப் பணமும் வசூலிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் விவசாயிகளை இவர்களிடமிருந்து பாதுகாப்பதற்கு, நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்க, மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் அங்கே ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி விவசாயிகளுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் பகுதியில் மிளகாய் சுமார் 800 ஹெக்டேர் பரப்பில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. ஹெக்டேருக்கு 1000 கிலோ வீதம் மிளகாய் உற்பத்தி செய்யப் பட்டு வருடத்திற்கு, 800 டன் மிளகாய் உற்பத்தியாகி, இதில் 500 டன் மிளகாய் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மாண்பு

1991 சனவரி 25]

மிகு உறுப்பினர் சொன்ன சங்கடத்தைப் போக்கும் வகையில், மிளகாய் வியாபாரத்திற்காக மார்க்கெட்டிங் சொசைட்டி ஒன்றை கொளத்தூரில் நடத்தத் தயாராக இருக்கிறோம். ஆனால் வருடத்தில் 3 தடவை மட்டும், 3 மாதம் மட்டும் விற்பனைக்கு மிளகாய் வருவதால் மிளகாய் விற்பனைக்காக என்று மட்டும் கூட்டுறவுச் சங்கம் ஒன்று கொளத்தூரில் தேவையில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள விவசாயிகளின் குறைகள் போக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 மாதம் மட்டும் என்று சொன்னார்கள். ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை, 6 மாதத்திற்கு மேல் மிளகாய் விற்பனைக்கு மார்க்கெட்டுக்கு வருகிறது. ஒரு ரூபாய் வீதம் அங்கே சில தனியார்கள் மூட்டை ஒன்றுக்கு வசூல் செய்வதால் 32 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வீணாகிறது. அதுமட்டுமல்ல. விவசாயிகளிடம் ஒரு நாள் திடீரென்று 20 ரூபாய் என்று விலை சொல்வார்கள். மறுநாள் 15 ரூபாய் என்றும், 10 ரூபாய் என்றும் சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. இப்படி அங்கே மோசடி நடைபெறுகிற காரணத்தால் விவசாயிகளுக்கு நிலையான பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம். அதை அங்கே ஏற்படுத்தி விவசாயிகள் நல்ல விலை பெறவும், ஆக்கிரமிக்கப்பட்டதை அப்புறப்படுத்தவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே 6 மாதம் மிளகாய் வருகிறது என்று சொன்னார்கள். 6 மாதமும் சேலம் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் ஏலம் நடத்த ஏற்பாடு செய்கிறோம். வேறு சில சங்கடங்களையும் இங்கே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சங்கடங்களும் சேலம் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் தீர்த்து வைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தானியங்கள் கொள்முதல்.

*11388—திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நேரடிக் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்வது போல், பயறு, உளுந்து மற்றும் புஞ்சைத் தானியங்கள் கொள்முதல் செய்யும் திட்டம் அரசிடம் உள்ள தா